


**21.10.2019**

## 11. “நம் குடியிருப்பின் எல்லைக்குள் தேவன்!”

**வா**னம் அவரது சிங்காசனம்! பூமியே அவரது பாதபடி! பூமிக்கும் வானத்திற்கும் உள்ள தெய்வ உறவே மெய் கிறிஸ்தவம்!

இத்தனை பெரிய தேவன், தான் விரும்பும் ஸ்தலமாய், “ஒரு ஏழையின் ஆவியை” கண்டுபிடித்தே தங்குகிறார்! இந்த மாய உலகின் யாதொன்றையும் சார்ந்து கொள்ளாமல், தேவனையே முற்றிலும் சார்ந்து வாழ்ந்திட பரிதபிக்கும் ஓர் “ஏழை!” தன்னோடு தங்கும் பரிசுத்த தேவனுக்கு முன் ‘தெய்வ பயத்துடன்’ பரிசுத்த ஜீவியம் செய்திட நாடும் நொறுங்குண்ட ஆவி கொண்டவன்! என ஏசாயா 66:1,2 வசனங்கள் கூறும் ஆச்சரியமான செய்தியைப் பாருங்கள்!

இதற்கு மாறாக, இன்றுள்ள ஆராதனைகூடங்களில் ‘தேவன் அறியப்பட வில்லை!’ என *பவுல்* கிரேக்கிய ஏதேன்ஸ் மார்ஸ் மேடையில் முழங்கினார்! ஆனால், தேவன் அவனோடு சேர்ந்து வாழும் குடியிருப்பின் எல்லைகளை பூமியிலுள்ள யாவருக்கும் தந்துள்ளார்! எவ்வித இக்கட்டு நேரங்களிலும் ‘இக்குடியிருப்பில்’ தேவனைத் தேடுவது, ஒரு குருடன் தேடுவது போல் தடவி தடவி தேடினால் கூட, அங்கு அவரை கண்டுபிடித்துவிட முடியும்! அவருடைய பிள்ளைகளாகிய ‘நம்மில் ஒருவருக்கும்’ அவர் தூரமாயிருக்கமாட்டார்! (அப்.17:23-28) அல்லேலூயா.

**– ரத்னம்**